



# அகர முதல

உரக்க சொல்வோம்

Aagaramuthalaa

மின்னிதழ்

www.Aagaramuthalaa.com



விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969




# 10.5 சதவீத சிறப்பு ஒதுக்கீடு! தமிழக அரசு ஆணை வெளியீடு!!

## வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சிறப்பு ஒதுக்கீடு -முதல்வர் ஆணை




அனைத்து கல்வி சேர்க்கைகளிலும் வன்னியர், சீர்மரபினர், இதர மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களின் சிறப்பு ஒதுக்கீட்டுக்கு தமிழக அரசு அரசாணை வெளியிட்டது. இது தொடர்பாக தமிழக அரசு 26/07/2021 வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் அரசுப் பணி நியமனங்களிலும், கல்வி வாய்ப்புகளிலும், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்கள் மற்றும் சீர்மரபினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள 20 இட ஒதுக்கீட்டிற்குள்ளாக, வன்னியர்கள், சீர்மரபினர் மற்றும் இதர மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு சிறப்பு ஒதுக்கீடு வழங்கி தமிழ்நாடு சட்டம் 8/2021 இயற்றப்பட்டது. அச்சட்டத்தின் அடிப்படையில், அரசுப் பணி நியமனங்களில் பின்பற்றப்பட்டு வரும் இன சுழற்சி முறையைத் திருத்தி அமைக்க, சட்ட வல்லுநர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் விரிவாக ஆலோசனை நடத்தி நிச்சயமாக ஒரு நல்ல முடிவு எடுக்கப்படும் என முதலமைச்சர் சட்டமன்ற பேரவையில் உறுதி அளித்திருந்தார்.அதன்படி, சட்ட வல்லுநர்கள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடன் கலந்து ஆலோசிக்கப்பட்டு, இந்த சிறப்பு ஒதுக்கீட்டை 26/07/2021 முதல் செயல்படுத்துவதற்கான, அரசாணையை வெளியிட்டு முதலமைச்சர் ஆணையிட்டுள்ளார். இது மட்டுமின்றி, இந்த ஆண்டு முதல் தொழிற்கல்வி உள்ளிட்ட அனைத்து கல்விச் சேர்க்கைகளும் மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு மேற்கூறிய புதிய சிறப்பு ஒதுக்கீட்டு முறையில் அடிப்படையிலேயே நடைமுறைப்படுத்தப்படும், இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டோக்கியோ ஒலிம்பிக்கில் இந்தியாவுக்கு முதல் பதக்கம்: வெள்ளி வென்றார் மீராபாய்



டோக்கியோவில் நடந்துவரும் ஒலிம்பிக் போட்டியில் மகளிருக்கான, பளுதூக்குதல் 49 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் மீராபாய் வெள்ளிப் பதக்கம் வென்றார்.2021 ஆம் ஆண்டுக்கான ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் நடந்து வருகிறது. இதில், மகளிருக்கான பளுதூக்கும் போட்டி சனிக்கிழமை) நடைபெற்றது.இதில் 49 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் மீராபாய் சானு இரண்டாம் இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் வென்றார். இதே எடைப் பிரிவில் சீன வீராங்கனை ஹூ ஜிஹி தங்கப் பதக்கம் வென்றார். இந்தோனேசிய வீராங்கனை கேண்டிக் விண்டிங் வெண்கல பதக்கம் வென்றார்.2013 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் பி.வி. சிந்து பாட்மிண்டனில் வெள்ளிப் பதக்கம் வென்றார். அதற்கடுத்து தற்போது பளு தூக்கும் போட்டியில் மீராபாய் இந்தியாவுக்கு வெள்ளிப் பதக்கம் வென்று தந்திருக்கிறார். மீராபாய் வென்ற பதக்கத்தின் மூலம் டோக்கியோவில் நடைபெறும் ஒலிம்பிக் போட்டியின் பதக்கப் பட்டியலில் இந்தியா இடம் பிடித்தது.இந்நிலையில், டோக்கியோவில் இருந்து அவர் விமானம் மூலம் நேற்று தாயகம் திரும்பினார். அவருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. வழக்கமான நடைமுறையாக அவருக்கும் அவரது பயிற்சியாளருக்கும் விமான நிலையத்தில், ஆர்டி பிசிஆர் பரிசோதனை செய்யப்பட்டது.இதனிடையே அவருக்கு மணிப்பூர் காவல்துறையில், விளையாட்டுப் பிரிவு) கூடுதல் கண்காணிப்பாளர் பதவி அளிக்கப்படுவதாக அம்மாநில அரசு அறிவித்துள்ளது.விமான நிலையத்தில் பேட்டியளித்த மீராபாய் சானு, ஒலிம்பிக் போட்டிக்கு ஆயத்தமாவதற்காக நான் அமெரிக்கா சென்று பயிற்சி மேற்கொண்டேன். அது எனக்கு நல்ல பலனளித்தது. உலகமே கரோனா பெருந்தொற்றால் தவித்துக் கொண்டிருந்த நிலையில், விமானப் பயணம் எல்லாம் எட்டாக் கனியாக இருந்த சூழலிலும் மத்திய அரசும், ஸ்போர்ட்ஸ் அத்தாரிட்டி ஆஃப் இந்தியாவும் கடுமையாக முயன்று என்னை அமெரிக்கா அனுப்பிவைத்தது. இன்று அதற்கான பலன் கிடைத்துள்ளது. ஒலிம்பிக் மெடல் கனவு மிகவும் நீண்டது. நான் 2016 ரியோ ஒலிம்பிக் போட்டியின்போதும் முயன்றேன். ஆனால், அது இப்போது நனவாகியுள்ளது. எனது இலக்கை எட்டும் முயற்சிக்காக நான் நிறைய தியாகம் செய்துள்ளேன். ஒட்டுமொத்த தேசமும் என் மீது எதிர்பார்ப்பைக் கொண்டிருந்ததால் எனக்கு சிறிய பதற்றம் ஏற்பட்டது. போட்டிக்கு முதல் நாள் நிறைய யோசனைகள் வந்தன. நான் அவற்றையெல்லாம் புறந்தள்ளினேன்.மாதவிடாய் பயம் இருந்தது. அதையும் கூட இது எல்லா பெண்களுக்கும் ஏற்படக்கூடியது தானே என்று ஒதுக்கினேன். துணிச்சலுடன் களம் கண்டேன். சீனா பளுதூக்குதலில் பயங்கர வலுவாக இருந்தது. இருப்பினும் நாம் அதை முறியடித்து வெள்ளி வென்றுள்ளோம். கனவு நனவாகிவிட்டது. ஐந்தாண்டு கால கடுமையான முயற்சிக்கு பலன் கிடைத்துள்ளது. இப்போது மகிழ்ச்சியாக இருக்கிறது, என்று கூறினார்.கடந்த 2000 ம் ஆண்டில் கர்னம் மல்லேஸ்வரி ஒலிம்பிக்கில் பளுதூக்குதலில் வெண்கலப்பதக்கம் வென்றபின் தற்போது பளுதூக்குதலில் 2வது வீராங்கனையாக சானு பதக்கம் வென்றுள்ளார். அதுமட்டுமல்லமல் ஒலிம்பிக்கில் பளுதூக்குதல் பிரிவில் வெள்ளி வென்ற முதல் வீராங்கனையும் சானு என்பது குறிப்பிடத்தக்கது.

## அரசு கலை, அறிவியல் கல்லூரிகளில் சேர முதல்

# விண்ணப்பிக்கலாம்



**மாணவர்கள் கல்லூரிகளில் சேர விண்ணப்பிக்க,**

**https://www.tngasa.in/pages/forms/application**

தமிழகத்தில் உள்ள 143 அரசு மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் மாணவர் சேர்வதற்கான விண்ணப்பப் பதிவு நேற்று தொடங்கியுள்ளது. தமிழகத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநரகத்தின்கீழ் இயங்கும் 1,547 அரசு, அரசு உதவி மற்றும் தனியார் கலை, அறிவியல் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 143 கலை, அறிவியல் கல்லூரிகள் அரசு நடத்துபவை, இதில், 92 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இடங்கள் உள்ளன. பிளஸ் 2 பொதுத் தேர்வு முடிவுகள் கடந்த 19 ம் தேதி வெளியிடப்பட்டன. இதற்கிடையே கரோனா தொற்றால் கடந்த ஆண்டு கலை, அறிவியல் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை இணையவழியில் நடத்தத் தமிழக அரசு உத்தரவிட்டது. அதேபோல இந்த ஆண்டும் அரசு கலை, அறிவியல் கல்லூரிகளுக்கான மாணவர் சேர்க்கை ஆன்லைனில் நேற்று தொடங்கியுள்ளது. அதன்படி, இணையவழியில் மாணவர்கள் நேற்று முதல் விண்ணப்பித்து வருகின்றனர். ஆகஸ்ட் 10 ம் தேதி வரை மாணவர்கள் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு அரசுக் கல்லூரிக்கு விண்ணப்பிக்கக் கட்டணமாக ரூ48 மற்றும் பதிவுக் கட்டணம் ரூ2 என மொத்தம் ரூ50 செலுத்த வேண்டும். இதில், தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடி மாணவர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தத் தேவையில்லை. பதிவுக் கட்டணமாக ரூ2 செலுத்தினால் போதும், இந்தக் கட்டணத்தை இணையம் மூலமாகச் செலுத்த வேண்டும். சமீபகாலமாகவே, பொறியியல் உள்ளிட்ட படிப்புகளைக் காட்டிலும் கலை, அறிவியல் படிப்புகளில் மாணவர் சேர்க்கை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. இதனால் கடந்த இரண்டு கல்வி ஆண்டுகளாக அனைத்துக் கல்லூரிகளிலும் இடங்களின் எண்ணிக்கை உயர்த்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## கர்நாடக முதல்வர் எடியூரப்பா ராஜினாமா



பாஜகவைச் சேர்ந்த கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பா நேற்று தனது முதல்வர் பதவியை ராஜினாமா செய்துள்ளார். பாரதிய ஜனதா கட்சியைப் பொறுத்தவரையில் 75 வயது நிரம்பிய யாரும் முதல்வர் பதவில் தொடரக்கூடாது, கட்டாய ஓய்வு பெறவேண்டும் என்பது விதிமுறை. ஆனால், கர்நாடக முதலமைச்சர் எடியூரப்பாவுக்கு தற்போது வயது 78 இருப்பினும், இரண்டாண்டுகளுக்கு முன்னர், 2019 ல் கர்நாடக முதல்வராக தனது 75 வது வயதில் பொறுப்பேற்றுக்கொண்டார். இந்நிலையில், ஆட்சிப்பொறுப்பேற்று சரியாக இரண்டு ஆண்டுகள் முடிவடைந்த நேற்று அவர் தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

RNI No: 2019098444



## முன்னாள் அமைச்சர்

# எம்.ஆர்.விஜயபாஸ்கர் வீட்டில் ரெய்டு



கரூர் மாவட்ட அதிமுக செயலாளரும், முன்னாள் போக்குவரத்துத்துறை அமைச்சருமான எம்.ஆர். விஜயபாஸ்கர் வீட்டில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். அதேபோல் கரூர், சென்னை உட்பட 20 இடங்களிலும் இந்த சோதனை நடைபெற்றது. இந்நிலையில் தமிழக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை 22/07/2021 அன்று வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், தமிழக அரசு போக்குவரத்துத்துறை முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.விஜயபாஸ்கர், அவரது பெயரிலும், அவரது மனைவி விஜயலட்சுமி, அவரது தம்பி சேகர் ஆகியோர் பெயரிலும் மற்றும் தான் பங்குதாரராக உள்ள நிறுவனங்கள் பெயரிலும் தனது பணிக்காலத்தில் வருமானத்திற்கு அதிகமாக சொத்துகள் சேர்த்துள்ளது சம்பந்தமாக அவர்கள்மீது கடந்த 22/07/2021 ஆம் தேதி அன்று கரூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் குற்ற எண். .5/AC/2021 பிரிவு 13(2) r/w 13(1)(b) of the PC (Amendment) Act, 2018 மற்றும் பிரிவு 12 r/w 13(2) r/w 13(1)(b) of the PC (Amendment) Act, 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணையில் இருந்து வருகிறது.மேற்படி வழக்கு தொடர்பாக எம்.ஆர். விஜயபாஸ்கர் மற்றும் அவரது உறவினர்கள், அவர் பங்குதாரராக உள்ள நிறுவனங்கள், அவருக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்பட்ட நபர்களின் இருப்பிடம் உட்பட மொத்தம் 6 இடங்களில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் 22/07/2021 ஆம் தேதி சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த சோதனையில் பணம் ரூபாய் 25, 56, 000மற்றும் சொத்து சம்பந்தப்பட்ட முக்கிய ஆவணங்கள்இ காப்பீட்டு நிறுவனங்களில் செய்யப்பட்ட முதலீடுகள் மற்றும் நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட பரிவர்த்தனை தொடர்பான ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. விசாரணை தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. இவ்வாறு செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கலைஞர் படத்தை ஆக.2ல்

# குடியரசுத் தலைவர் திறந்து வைக்கிறார்!



சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் அப்பாவு கடந்த 24/07/2021 அன்று செய்தியாளர்களைச் சந்தித்தார்.அப்போது அவர் கூறியதாவது, தமிழக சட்டப்பேரவையில் முன்னாள் முதலமைச்சர் கலைஞரின் உருவப்படத்தை ஆகஸ்ட் 2 ஆம் தேதி அன்று மாலை 05.00 மணிக்கு நடைபெறும் விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துக் கொள்ளும் இந்திய குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த திறந்து வைக்கிறார். படத்திறப்பு விழாவில் தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோஹித், தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர். விழாவில் பங்கேற்க பாகுபாடு இன்றி அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்படும், எனத் தெரிவித்தார்.

# மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் மாணவர் சேர்க்கையைத் தொடங்க மத்திய அரசிடம் பரிந்துரை



மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையில் மாணவர் சேர்க்கையைத் தொடங்க மத்திய அரசிடம் பரிந்துரைத்துள்ளதாகவும், எய்ம்ஸ் நிர்வாகத்தின் முடிவின் அடிப்படையில் மாணவர் சேர்க்கை தொடங்கும் எனவும் உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் தமிழக அரசு தெரிவித்துள்ளது. இந்த வழக்கு விசாரணைக்கு வந்த போது, தமிழக சுகாதாரத்துறை செயலர் பதில்மனுவை தாக்கல் செய்தார். அதில் , முதற்கட்டமாக 50 மாணவர்களை எய்ம்சில் சேர்ப்பது குறித்து மத்திய அரசிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது என்றும், புதிதாக சேர்க்கப்படும் மாணவர்கள் அருகிலிருக்கும் மதுரை, தேனி, சிவகங்கை மருத்துவ கல்லூரிகளில் அனுமதிக்கப்படுவர் எனவும், அதற்கான வசதிகளை செய்து கொடுக்க தமிழக அரசு தயாராக உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது . இதனை ஏற்ற நீதிபதிகள் 2 நாட்களுக்குள்ளாக தமிழக அரசின் பதில் மனுவை மத்திய அரசு வழக்கறிஞருக்கு வழங்கவும், மத்திய அரசு பதிலளிக்கவும் உத்தரவிட்டு வழக்கை 30ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

# பிரதமர் மோடிவுடன் இபிஎஸ், ஓபிஎஸ் சந்திப்பு!



தமிழ்நாட்டிற்கு கூடுதல் தடுப்பூசி மற்றும் மேகதாது அணை விவகாரம் குறித்து பிரதமர் மோடியிடம் பேசியதாக அதிமுக இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார். அதிமுக இணை ஒருங்கிணைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமியும் அந்தக் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் ஓ. பன்னீர்செல்வமும் தனித்தனியாக டெல்லி சென்றனர். இந்நிலையில் நேற்று காலை11மணியளவில், நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள அறையில், பிரதமர் மோடியை இருவரும் சந்தித்துப் பேசினர். சுமார் 35 நிமிடங்கள் வரை ஆலோசனை நடத்திய இருவரும் பின்னர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். தமிழ்நாட்டிற்கு தேவையான கொரோனா தடுப்பூசிகளை விரைந்து வழங்கிட வேண்டும் என பிரதமர் மோடியிடம் வலியுறுத்தியதாக எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார். காவிரியின் குறுக்கே மேகதாது அணை கட்ட கர்நாடக அரசுக்கு மத்திய அரசு அனுமதி வழங்கக்கூடாது என வலியுறுத்தியதாகவும் தெரிவித்தார். அதிமுகவில் எந்த தொண்டருக்கும் அதிருப்தி இல்லை என்று கூறிய எடப்பாடி பழனிசாமி, சசிகலா குறித்த கேள்விக்கு பதிலளிக்க மறுத்துவிட்டார்

# தமிழகத்தில் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டம் அடுத்த மாதம் தொடக்கம் அமைச்சர் மா. சுப்பிரமணியன்.

தமிழகத்தில் அடுத்த மாதம் மக்களை தேடி மருத்துவம் என்ற திட்டம் தொடங்கப்படவுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களை அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன், காந்தி ஆகியோர் ஆய்வு செய்தனர் . அதன்பின் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் மா. சுப்பிரமணியன் மக்களை தேடி மருத்துவம் திட்டம் மூலம் சர்க்கரை, ரத்தகொதிப்பு உள்ளிட்ட நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகவும், இதன் மூலம் தமிழகம் முழுவதும் சுமார் 1 கோடி பேர் பயன்பெறுவார்கள் என்றும் தெரிவித்தார்.

# செப் 19 முதல் ஐக்கிய அரபு அமீரகத்தில் ஐபிஎல் போட்டி!

ஐக்கிய அரபு அமீரகத்தில் வரும் செப்டம்பர் மாதம் 19 தேதி முதல் நடைபெறும் மீதமுள்ள ஐபிஎல் போட்டிகளின் அட்டவணையை வெளியிட்டது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியம்.அதன்படி,செப்டம்பர் 19 தேதி அன்று துபாயில் நடைபெறும் போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் மோதுகின்றன. ஐபிஎல் இறுதிப் போட்டி துபாயில் அக்டோபர் 15 தேதி அன்று நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கரோனா காரணமாக, இந்தியாவில் மே 2 ஆம் தேதிக்கு பின் ஐபிஎல் போட்டித் தொடர் பாதியில் நிறுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

அகர முதல கவிதைக்களம்
250-க்கும் மேற்பட்ட கவிஞர்கள், தினம் 70-க்கும் மேற்பட்ட படைப்புகள், வாரம் 20-ம், மாதம் 50க்கும் மேற்பட்ட புத்தகப்பரிசுகளும், சான்றிதழ்களும்,
என்றும் தமிழ்ப்பணியில்: அகரமுதல இலக்கிய பேரவை மற்றும் சிவம் அறக்கட்டளை-முகையூர். தொடர்புக்கு: 9597887847

GoLAAH TRAVELS
முன்பதிவிற்கு
9490547783
8870884969
கார் வாங்க/ விற்க வேண்டுமா?. இப்போது 50-க்கும் மேற்பட்ட கார்கள் உடனுக்குடன்!
எங்களிடம் 24 நேரமும் கார் வாடகைக்கு மிகக்குறைந்த விலையில்
அகர முதல டிஜிட்டல் பிரிண்டர்ஸ்
9597887847 / 8870884969

அகர முதல
மின்னிதழ்
Aagaramuthalaa
www.Aagaramuthalaa.com

விளம்பர தொடர்புக்கு
9597887847 / 8870884969

செவ்வாய், ஜூலை 27.2021 மயிலாடுதுறை மலர்:07 இதழ்:04

# மயிலாடுதுறை மாவட்ட செய்திகள்

# மயிலாடுதுறை நகரில் விரைவில் புறவழிச்சாலை திட்டம்

## மயிலாடுதுறை: குழந்தைகளுக்கு நிமோனியா தடுப்பூசி போடும் முகாமினை

## மாவட்ட ஆட்சியர் மற்றும் எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



மயிலாடுதுறை, ஜூலை 24; மயிலாடுதுறை மாவட்டம், கூறைநாடு நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் குழந்தைகளுக்கு நிமோனியா தடுப்பூசி போடும் முகாமினை பூம்புகார் எம்எல்ஏ முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைத்தனர்.மயிலாடுதுறை மாவட்டத்தில் குழந்தைகளுக்கு நிமோனியா மற்றும் மூளைக் காய்ச்சல் நோய் ஏற்படாமல் தடுக்கும் வகையில் தடுப்பூசி போடும் முகாம் தொடங்கப்பட்டுள்ளது. இதனை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா மற்றும் நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம். முருகன் ஆகியோர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தனர்.பின்னர் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடும் முகாமினை மாவட்ட ஆட்சியர் மற்றும் பூம்புகார் எம்எல்ஏ பார்வையிட்டனர். மேலும் மயிலாடுதுறை மாவட்டத்தில் இதுவரை ஒரு வயதிற்கு மேற்பட்ட 11,151 குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி போடப்பட்டு உள்ளதாகவும் அடுத்த ஒரு மாதத்தில் அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களில் 929 குழந்தைகளுக்கு இந்த தடுப்பூசி இலவசமாக போடப்படும் என ஆட்சியர் லலிதா தெரிவித்தார். மூன்று கட்டங்களாக போடப்படும் இந்தத் தடுப்பூசியை பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு போட்டுக்கொண்டனர். நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை இணை இயக்குனர் மகேந்திரன் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை இணை இயக்குனர் பிரகாஷ் ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் ரவிக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் செவிலியர்கள்பலர் கலந்து கொண்டனர்.

## புறவழிச்சாலை திட்டம் தொடர்பாக ராஜகுமார் எம்எல்ஏ மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஆய்வு!



மயிலாடுதுறை நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க 16.6 கிலோ மீட்டர் தூரத்திற்கு புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் தொடர்பாக ராஜகுமார் எம்எல்ஏ மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.மயிலாடுதுறை நகரில் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கும் வகையில் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு புறவழிச்சாலை அமைக்கும் திட்டம் உருவாக்கப்பட்டது. அந்த திட்டத்தின்படி அப்போது மயிலாடுதுறை நகரை சுற்றி 100 அடி அகலத்தில் சாலை அமைப்பதற்காக நிலம் அளவீடு செய்யப்பட்டு எல்லைக்கற்கள் பதிக்கப்பட்டன. இந்த புறவழி சாலை அமைய உள்ள பெரும்பாலான நிலங்கள் இந்து சமய அறநிலையத்துறைக்கு கட்டுப்பட்ட பரிமள ரங்கநாதர் கோவிலுக்கும், தருமபுரம், திருவாடுதுறை ஆதீனங்களுக்கும் சொந்தமான நிலங்களாக உள்ளன. இந்த நிலங்களை கைப்பற்றுவதில் இந்து சமய அறநிலையத்துறை நிர்ணயித்த தொகையை தமிழக அரசு குறைத்து மதிப்பீடு செய்ய கேட்டுக்கொண்டது. இதில் ஏற்பட்ட பிரச்சனையால் கடந்த 10 ஆண்டுகளாக மயிலாடுதுறை புறவழிச்சாலை திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இந்த நிலையில் திமுக தேர்தல் அறிக்கையில் மயிலாடுதுறை புறவழிச்சாலை திட்டம் உடனடியாக செயல்படுத்தப்படும் என தெரிவிக்கப்பட்டிருந்தது. இதனைத்தொடர்ந்து இந்த புறவழிச்சாலை திட்டத்திற்கான ஆய்வு பணி நேற்று ராஜகுமார் எம்எல்ஏ மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் முன்னிலையில் நடந்தது. முன்னதாக கல்லணை சாலையில் மாப்படுகை பகுதியிலிருந்து அமைய உள்ள புறவழிச்சாலை இடத்தை எம்எல்ஏ மற்றும் நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகள் பார்வையிட்டனர். பின்னர் ராஜகுமார் எம்எல்ஏ நிருபர்களிடம் கூறும்போது, கடந்த 10 ஆண்டுகளுக்கு முன்பு மயிலாடுதுறை புறவழிச்சாலை திட்டம் உருவாக்கப்பட்டது. தொடர்ந்து பல்வேறு காரணங்களால் இந்த பணி கிடப்பில் போடப்பட்டு விட்டது. இது குறித்து தமிழக முதல்—அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு சென்று உள்ளேன். விரைவில் புறவழிச்சாலை பணி தொடங்கப்படும். ஓரிரு வாரங்களில் நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எவ.வேலு மயிலாடுதுறை வந்து புறவழிச்சாலை பணிகளை ஆய்வு மேற்கொள்ள உள்ளார் என்றார்.நெடுஞ்சாலைத்துறை, நபார்டு மற்றும் கிராம சாலைகள்உதவி கோட்ட பொறியாளர் சிவக்குமார் கூறுகையில், 16.6 கிலோ மீட்டர் தொலைவில் புறவழிச்சாலை அமைக்கப்பட உள்ளது. முதல் கட்டமாக கல்லணை சாலையில் இருந்து தொடங்கி சீர்காழி சாலை சாவடி வரை 7 கிலோ மீட்டர் புறவழிச்சாலை பணிகள் நடைபெற உள்ளது. தொடர்ந்து சீர்காழி சாலையில் இருந்து பூம்புகார் சாலை கடந்து தரங்கம்பாடி சாலையில் புதிதாக மாவட்ட கலெக்டர் அலுவலகம் அமையவுள்ள இடம் வரை 5 கிலோ மீட்டர் தூரம் சாலை அமைக்கப்பட உள்ளது அதன் பிறகு தரங்கம்பாடி சாலையில் இருந்து திருவாரூர் சாலை வரை மீதமுள்ள சாலை அமைக்கப்படும். இதற்கான திட்ட வரைவு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என்றார்.இந்த ஆய்வின்போது திமுக ஒன்றிய பொறுப்பாளர் இமயநாதன், காங்கிரஸ் நகர தலைவர் ராமானுஜம், நிர்வாகிகள் நவாஸ், வடவீரபாண்டியன், வர்த்தக சங்க நிர்வாகிகள் ரவிச்சந்திரன், மகாலட்சுமி மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## தரங்கம்பாடியில் கடலோர அமலாக்க பிரிவு மீனவளத்துறை மற்றும் கடலோரகாவல் துறையினர் ஆய்வு..!



மயிலாடுதுறை மாவட்டத்தில் 14 மீனவ கிராமங்களை சேர்ந்தவர்கள் கடந்த மூன்று நாட்களாக சுருக்குமடி வலைக்கு அனுமதி கோரியும் அதனை மறுக்கும் பட்சத்தில் மீன்பிடி ஒழுங்குமுறை சட்டம் 1983 ல் உள்ள விதிகாளை அமல்படுத்த கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.அவரைத் தொடர்ந்து திங்கள்கிழமை குடியுரிமை அடையாளங்களை அரசிடம் ஒப்படைத்தனர்.இதனையடுத்து மாவட்ட ஆட்சியர் லலிதா தலைமையில் நடைபெற்ற ஆலோசனை கூட்டத்தில் பேசிய ஆட்சியர் சுருக்குமடி வலைக்கு அனுமதி வழங்க முடியாது அதே நேரம் 1983 ஆம் ஆண்டு மீன்பிடி சட்டம் முழுமையாக அமல்படுத்தபடும் எணவும் தெரிவித்து, விதிமீறல்கள் குறித்து ஆய்வு செய்து நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்ததார்.அதனடிப்படையில் செவ்வாய்க்கிழமை தரங்கம்பாடி, சின்னங்குடி, சின்ன மேடு மீனவர் கிராமத்தில் கடல்சார் அமலாக்க பிரிவு ஆய்வாளர் செல்வி வெர்ஜினியா. மீன்வளத் துறையினர் படகுகள், படகு இஞ்சின் திறன் மற்றும் வலைகள் குறித்த ஆய்வு மேற்கொண்டனர்.

## தமிழ்நாடு கிரிக்கெட் மகளிர் அணியில் மயிலாடுதுறை பள்ளி மாணவி தேர்வு.



தமிழ்நாடு கிரிக்கெட் அசோசியேஷன் சார்பில் விளையாட ஆண்டுதோறும் வீராங்கனைகள் தேர்வு நடைபெறுவது வழக்கம் அந்தவகையில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் கிரிக்கெட் அணியில் மயிலாடுதுறையில் உள்ள தனியார் சில்வர் ஜுப்ளி பள்ளியில் 12 ஆம் வகுப்பு பயின்று வருகின்ற மாணவி தன்யா தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். தேர்வு செய்யப்பட்டுள்ள 20 மாணவிகளில் ஆறாவது இடத்தில் தேர்வாகியுள்ளார். இந்த தேர்வில் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களில் இருந்தும் சுமார் 450 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டதில் மயிலாடுதுறையை சேர்ந்த பள்ளி மாணவி தேர்வு பெற்றுள்ளார். தேர்வாகியுள்ள மாணவிக்கு பள்ளியின் நிறுவனர், தாளாளர், ஆசிரியர்கள், பயிற்றுநர் உள்ளிட்ட பலர் பாராட்டி வருகின்றனர்.இது குறித்து மாணவி தன்யா கூறுகையில் கிரிக்கெட் விளையாட்டில் சிறுவயதிலிருந்து ஆர்வம் அவரது தந்தை அளித்த ஊக்கம், உற்சாகம், உத்வேகம் மற்றும் கிரிக்கெட் பயிற்றுநர்கள் கொடுத்த ஊக்கத்தின் மூலமாகவும் தொடர்ந்து பயிற்சிகளை மேற்கொண்டு ஆண்டிற்கான இந்தியாவின் கிரிக்கெட் மகளிர் அணியில் விளையாட வேண்டும் என்பதே எனது கனவு, அந்த வகையில் தமிழ்நாடு கிரிக்கெட் மகளிர் அணியில் விளையாட எனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு எனக்காக உறுதுணையாக அனைத்து பெரியோர்களுக்கும் நன்றி என தெரிவித்தார்.

## மயிலாடுதுறை அருகே உள்ள நவீன அரிசி ஆலையை அதிநவீன அரிசி ஆலையாக மாற்றியமைக்கும் பணி !

## மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் லலிதா ஆய்வு!



மயிலாடுதுறை அருகே தமிழ்நாடு அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நவீன அரிசி ஆலையை அதிநவீன அரிசி ஆலையாக மாற்றியமைக்கும் பணி நடந்து வருகிறது. இதனை கலெக்டர் லலிதா ஆய்வு செய்தார்.மயிலாடுதுறை அருகே சித்தர்காடு பகுதியில் உள்ள தமிழக அரசு நுகர்பொருள் வாணிப கழகத்தின் நவீன அரிசி ஆலை அதிநவீன அரிசி ஆலையாக மாற்றியமைக்கும் பணி ரூ.6 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வருகிறது. அரவை பகுதி, அவியல் பகுதி, கொதிகலன் பகுதி, தானியங்கி மூட்டை தைத்தல் பகுதி என பணியினை நான்கு பகுதிகளாக பிரித்து, அவற்றில் கட்டுமான பணிகள், அதிநவீன எந்திரங்கள் பொருத்தும் பணிகள் உள்ளிட்டவைகள் நடைபெற்று வருகிறது. இந்த பணியானது 90 சதவீதம் நிறைவடைந்துள்ளது. தற்போது மின்வினியோகம் மற்றும் மின்விளக்குகள் பொருத்தும் பணிகள் நடைபெற்று வருகிறது. இவற்றை கலெக்டர் லலிதா பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது அவர், மீதம் உள்ள பணிகளின் விவரங்களை, பொறியாளரிடம் கேட்டறிந்து, பணிகளை விரைவாக மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார். அப்போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் சண்முகநாதன், உதவி பொறியாளர் பொறுப்பு செந்தில்குமரன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## கருவியில் இருந்து பூம்புகார் வரை பொலிவிழந்து காணப்படும் தோரண வாயில்கள் சீரமைக்கப்படுமா.?

## பொதுமக்கள் எதிர்பார்ப்பு.!



பூம்புகார் சுற்றுலாத்தலம் 1972 ம் ஆண்டு அப்போதைய தமிழக முதல்—அமைச்சர் கருணாநிதியால் உருவாக்கப்பட்டது. இந்த சுற்றுலாத்தலத்தை காண தினந்தோறும் சுற்றுலா பயணிகள் மற்றும் திரளான பொதுமக்கள் வரவேண்டும் என்ற நோக்கத்தில் சென்னை—நாகை தேசிய நெடுஞ்சாலையில் பூம்புகார் எல்லையான கருவியில் இருந்து பூம்புகார் வரை கோவலன், கண்ணகி, மாதவி, கரிகால சோழன், இளங்கோவடிகள் ஆகிய பெயரை கொண்ட தோரண வாயில்கள் பூம்புகார் கலைக்கூடம் வரை கலை நயத்துடன் அமைக்கப்பட்டது. அதில் இருந்து தோரண வாயில்கள் நெடுஞ்சாலை துறை மூலம் பராமரிக்கப்பட்டு வந்தது. ஆனால் கடந்த பல ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி பொலிவிழந்து காணப்படுகிறது.இதுகுறித்து பூம்புகார் வியாபாரிகள் சங்க தலைவர் சங்கர் கூறுகையில், அப்போதைய தமிழக முதல்—அமைச்சர் கருணாநிதியால் கலைநயத்துடன் உருவாக்கப்பட்ட தோரண வாயில்கள் தற்போது பொலிவிழந்து காணப்படுகிறது. சீர்காழி உட்கோட்ட நெடுஞ்சாலை துறை மூலம் ஆண்டுதோறும் கோடிக்கணக்கான ரூபாய் மதிப்பீட்டில் சாலை பணிகள் நடந்து வருகின்றன. ஆனால் சரித்திர புகழ்பெற்ற தோரணவாயில்களை, பராமரிக்க நெடுஞ்சாலைத்துறை ஆர்வம் காட்டுவதில்லை, இந்த தோரணவாயில்களை சீரமைக்கக்கோரி பலமுறை சீர்காழி உட்கோட்ட நெடுஞ்சாலைத்துறை பொறியாளரை சந்தித்து மனு அளித்தும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எனவே சரித்திர புகழ்பெற்ற தோரண வாயில்கள் சீரமைக்கப்படுமா?என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது என்றார்.

## மயிலாடுதுறை விவசாயிகளுக்கு உழவு இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி.!



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி தாலுக்கா திருக்கடையூரில் தமிழ்நாடு அரசு வேளாண் மற்றும் உழவர் நலத் துறை சார்பாக விவசாயிகளுக்கு உழவு இயந்திரம் வழங்கும் நிகழ்ச்சி திருக்கடையூரில் அரசு விதைப் பண்ணையில் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம் முருகன் உழவு இயந்திரம் மற்றும் உழவு கருவிகளை வழங்கும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது.தமிழ்நாடு அரசு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை செம்பனார்கோவில் வட்டாரத்தில் கூட்டு பண்ணை திட்டம் 2020 21 உழவர் உற்பத்தியாளர் குழு கீழபெரும்பள்ளம், அரசூர், அன்னவாசல் உள்ளிட்ட ஊராட்சியில் உள்ள கிராம விவசாயிகளுக்கு பண்ணைக் கருவிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு நிகழ்ச்சியில் செம்பனார்கோவில் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் தாமஸ் தலைமை வகித்தார்.உழவர் உற்பத்தியாளர் குழுக்கள் கீழப்பெரும்பள்ளம் விவசாயிகளுக்கு 3 உழவு இயந்திரம் ரூபாய் 5,69,378 மதிப்பீடும், அரசூர் 3 உழவு இயந்திரம் ரூபாய் 5,58,718,மதிப்பீட்டிலும், அன்னவாசல் விவசாயிகளுக்கு இரண்டு உழவு இயந்திரம் மற்றும் சுழல் கலப்பை 1 ரூபாய் 5,13,471 மதிப்பீட்டிலும் மொத்தம் 9 பண்ணைக் கருவிகளை பூம்புகார் சட்டமன்ற உறுப்பினரும், நாகை வடக்கு மாவட்ட திமுக பொறுப்பாளருமான நிவேதா எம் முருகன் வழங்கி உரையாற்றி பேசினார். மேலும் நிகழ்ச்சியில் திருக்கடையூர் விதைப் பண்ணை வேளாண்மை அலுவலர் குமரன், துணை வேளாண்மை அலுவலர் உமாபசுபதி, செம்பனார்கோயில் ஒன்றியக்குழு பெருந்தலைவர் நந்தினி ஸ்ரீதர், ஒன்றியக்குழு துணைத்தலைவர் மைனர் பாஸ்கர், நாகை வடக்கு மாவட்ட திமுக துணை செயலாளர் ஞானவேலன், செம்பை தெற்கு ஒன்றிய செயலாளர் அப்துல் மாலிக், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம்எம் சித்திக், மாவட்ட ஊராட்சிகுழு உறுப்பினர் துளசிரேகா, ஊராட்சி மன்ற தலைவர்கள் ஜெயமாலினி சிவராஜ், சாமிநாதன், ராஜா, ரங்கராஜன், ராஜலிங்கம் மயிலாடுதுறை மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி அமைப்பாளர் ஸ்ரீதர் மற்றும் அரசு அலுவலர்கள், உழவர் உற்பத்தியாளர் குழு உறுப்பினர்கள், விவசாயிகள் உள்ளிட்டோர் பலர் பங்கேற்றனர்.

## தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையை பார்வையிட சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரிப்பு





மயிலாடுதுறை மாவட்டம், தரங்கம்பாடியில் உள்ள டேனிஷ் கோட்டையை பார்வையிட சுற்றுலா பயணிகளின் வருகை தற்போது அதிகரித்துள்ளதுகி.பி 1620 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டினர் தரங்கம்பாடியை, இந்தியாவில் தங்களது வர்த்தக மையமாக அமைக்க முடிவு செய்தவுடன், அப்போது தஞ்சையை ஆண்ட விஜயரகுநாத நாயக்கரிடம், தரங்கம்பாடியில் ஒரு துறைமுகத்தையும், டேனிஷ் கலை நுணுக்கத்துடன் ஒரு பாதுகாப்பு கோட்டையையும் அமைக்க அனுமதி பெற்றனர். 2 ஆண்டு காலத்துக்குள் கி.பி 1622ல் கட்டி முடிக்கப்பட்ட அந்த பிரமாண்ட கோட்டை இந்தியாவில் டேனிஷ் வர்த்தக மையத்தின் தலைமை இருப்பிடமாக அமைந்தது.400 ஆண்டுகள் பழமையாகியும் இன்றும் கம்பீரமாய் காட்சியளிக்கும் இக்கோட்டையில் செயல்படும் அகழ்வைப்பகத்தில்14, 15, 16 ஆம் நூற்றாண்டுகளில் டேனிஷ்காரர் கள், தமிழர் கள் பயன்படுத்திய பொருள்கள், 1200 ஆம் ஆண்டு கால சிலைகள், பீங்கான், மரத்தாலான பழமையான பொருள்கள், டேனிஷ் அரசர் கள், ஆளுநர் களின் புகைப்படங்கள், டேனிஷ் கால பத்திரங்கள், போர்க் கருவிகள், 16 ஆம் நூற்றாண்டில் தரங்கம்பாடி வந்த கப்பல் ஒன்றின் உடைந்த பாகங்கள் என ஏராளமான வரலாற்று நினைவுச் சின்னங்கள் பத்திரப்படுத்தி காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. மேலும், கோட்டையின் தரைத் தளத்தில் சிறைச்சாலை, ஓய்வறைகள், பண்டக வைப்பறை பீர், ஒயின் கிடங்கு அறைகளாக டேனிஷ் காலத்தில் பயன்படுத்தப்பட்ட அறைகள் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையில், கரோனா நோய்த் தொற்று பரவலை கட்டுப்படுத்தும் வகையில் அரசு விதிமுறைப்படி டேனிஷ் கோட்டையை பார்வையிட மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் ஜூலை 6 ஆம் தேதி முதல் பொதுமுடக்க தளாவுகளுக்குப் பிறகு மீண்டும் டேனிஷ் கோட்டையை பார்வையிட நாள்தோறும் ஆயிரக்கணக்கான தமிழகம் மற்றும் வெளி மாநிலங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வந்து பார்வையிட்டு செல்கின்றனர்.

## மயிலாடுதுறை மாவட்ட 20 மீனவ கிராமம் ஆலோசனை கூட்டம்



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் 20 மீனவ கிராமங்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இரண்டு மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில் 5 தீர்மாணங்கள் நிறைவேற்றபட்டது. அரசால் தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலை மற்றும் அதிவேக இயந்திர படகு பயன்பாடுகளை முற்றிலும் தடைசெய்வது எனவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் சுருக்குமடி வலைக்கு அனுமதி கோரி போராட்டத்தில் ஈடுபட்ட மடவாமேடு, பூம்புகார், திருமுல்லைவாசல், சந்திரபாடி உள்ளிட்ட மீனவ கிராமத்திற்கு கடும் கண்டனம் தெரிவிப்பது. சிறு தொழில்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள அரசை வலியுறுத்துவது, அரசின் நடவடிக்கையால் சிறு தொழில்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டால் மூன்று மாவட்ட மீனவர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபடுவது, எனவும் தீர்மானம் நிறைவேற்றினர். மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த 20 மீனவ கிராம தலைவர்கள், பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

விளம்பர தொடர்புக்கு
9597887847
8870884969

## தரங்கம்பாடியில் மயிலாடுதுறை மாவட்ட 20 மீனவ கிராமம் ஆலோசனை கூட்டம்.!



மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடியில் 20 மீனவ கிராமங்களின் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இரண்டு மணி நேரம் நடைபெற்ற கூட்டத்தில் 5 தீர்மானங்கள் நிறைவேற்றபட்டது. அரசால் தடை செய்யப்பட்ட இரட்டைமடி வலை மற்றும் அதிவேக இயந்திர படகு பயன்பாடுகளை முற்றிலும் தடைசெய்வது எனவும், மீனவர்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் சுருக்குமடி வலைக்கு அனுமதி கோரி போராட்டத்தில் ஈடுபட்ட மடவாமேடு, பூம்புகார், திருமுல்லைவாசல், சந்திரபாடி உள்ளிட்ட 14 மீனவ கிராமத்திற்கு கடும் கண்டனம் தெரிவிப்பது. சிறு தொழில்கள் பாதிக்காத வகையில் நடவடிக்கை மேற்கொள்ள அரசை வலியுறுத்துவது, அரசின் நடவடிக்கையால் சிறு தொழில்கள் பாதிக்கும் நிலை ஏற்பட்டால் மூன்று மாவட்ட மீனவர்கள் இணைந்து போராட்டத்தில் ஈடுபடுவது. எனவும் தீர்மானம் நிறைவேற்றினர். மயிலாடுதுறை மாவட்டத்தை சேர்ந்த 20 மீனவ கிராம தலைவர்கள், பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## மேகதாதுவில் அணை கட்டும் முயற்சியை தடுத்து நிறுத்தக் கோரி மயிலாடுதுறையில், விவசாயிகள் ஆர்ப்பாட்டம்.!



மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர் அலுவலகம் முன்பு தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு மாவட்ட தலைவர் வீரராஜ் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர்கள் சிவராமன், கிருஷ்ணமூர்த்தி, அறிவழகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்திய கம்யூனிஸ்டு மாவட்ட செயலாளர் சீனிவாசன், மாநில குழு உறுப்பினர் இடும்பையன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். கர்நாடக அரசு காவிரியின் குறுக்கே மேகதாதுவில் அணை கட்டும் முயற்சியை மத்திய அரசு தடுத்து நிறுத்த வேண்டும். தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள !யார்கோல்' அணையை அகற்ற வேண்டும். நிபந்தனையின்றி அனைத்து விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகள் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டன. ஆர்ப்பாட்டத்தில் நிர்வாகிகள் வரதராஜன், கலியமூர்த்தி, கஜேந்திரன், மணி, ராதாகிருஷ்ணன், முருகன் உள்பட பலர் கலந்து கொண்டனர். ஆர்ப்பாட்டத்தை தொடர்ந்து கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்த விவசாயிகள், மனுவை பிரதமருக்கு அனுப்ப வேண்டுகோள் விடுத்தனர்.

## மயிலாடுதுறை: திருமணமான 5 மாதத்தில்

## புதுமாப்பிள்ளை தூக்கில் பிணம்



கொள்ளிடம் அருகே திருமணமான 5 மாதத்தில் புதுமாப்பிள்ளை தூக்கில் பிணமாக தொங்கினார். இதுகுறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள். மயிலாடுதுறை மாவட்டம் கொள்ளிடம் அருகே உள்ள புதுப்பட்டினம் ஊராட்சி மடவாமேடு நடுத்தெருவை சேர்ந்தவர் வீரத்தமிழன் மகன் விக்னேஷ் வயது 26 மீனவரான இவருக்கும், இவரது உறவினரான பழையார் பகுதியை சேர்ந்த துர்கா(23) என்பவருக்கும் கடந்த 5 மாதத்திற்கு முன்பு திருமணம் நடந்தது. திருமணத்திற்கு பின்னர் மடவாமேடு பகுதியில் பாட்டி மாரியம்மாள், மற்றும் மனைவியுடன் வசித்து வந்த விக்னேஷ் நேற்று முன்தினம் வீட்டில் தூக்கில் பிணமாக தொங்கினார். இதனை அறிந்த அவரது தந்தை வீரத்தமிழன் இதுகுறித்து புதுப்பட்டினம் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீஸ் இன்ஸ்பெக்டர் சந்திரா மற்றும் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று விக்னேஷ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். திருமணமான 5 மாதத்தில் புதுமாப்பிள்ளை தற்கொலை செய்து கொண்டதால் இது குறித்து போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். குடும்பத்தகராறு காரணமாக தற்கொலை செய்து கொண்டாரா? அல்லது அவரது தற்கொலைக்கு வேறு எதுவும் காரணமா? என்று போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.







